# இரண்டாவது சமுதாய நீர் வழங்கல் மற்றும் சுாதாரச் செயற்திட்டத்தின் - 2011 யூன் 30

## 1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழும் சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர, இரண்டாவது சமுதாய நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்திட்டத்தின் முடிவுறுத்தும் நிதிக்கூற்றுக்களிலிருந்து 2011 யூன் 30 இல் உள்ளவாறு அந் நிதிச் செயற்பாடுகளும் காசுப்பாய்ச்சலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்று நான் அபிப்பிராயம் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்படக்கூடியதாக இருந்த தகவல்களின் பிரகாரம், 2011 யூன் 30 இல் செயற்திட்டம் முடிவுறுத்தப்பட்ட திகதிக்கு செயற்திட்டத்தின் திரண்ட செலவினம் பின்வருமாறாகும்.

| விபரம் | 2011 யூன் 30 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|
| | ரூபா'000 |
| சிவில் வேலைகள் | 4,953,805 |
| நிலையான சொத்துக்கள் | 113,720 |
| ஆலோசனை சேவைகள் | 1,216,512 |
| பயிற்சி | 149,920 |
| செயற்திட்ட முகாமைத்துவம் | 373,126 |
| | 6,807,083 |

(ஆ) 2011 யூன் 30 ஆம் திகதி வரை சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் செயற்திட்டத்திற்கு பணம் விடுவிக்கப்படுவது தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

| விபரம் | ஒதுக்கப்பட்ட அளவு | விடுவிக்கப்பட்ட அளவு |
|---|---|---|
| | எஸ்டீஆர் | எஸ்டீஆர் |
| சிவில் வேலைகள் | 16,010,000 | 16,443,027 |
| நிலையான சொத்துக்கள் | 550,000 | 552,659 |
| ஆலோசனை சேவைகள் | 5,990,000 | 5,698,993 |
| பயிற்சி | 870,000 | 634,318 |
| செயற்திட்ட முகாமைத்துவம் | 370,000 | 406,727 |
| | 23,790,000 | 23,735,724 |

2011 யூன் 30 இல் செயற்திட்டம் பூர்த்தியடைகையில் நிதியப் பயன்பாடு 99% ஆன போதிலும் ஆலோசனைச் சேவைகளுக்கும் பயிற்சிகளுக்குமாக நிதிப் பயன்பாடு முறையே 95% ஆகவும் 72% ஆகவும் காணப்பட்டது.

(இ) 2011 யூன் 30 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் நிதி முன்னேற்றம் பின்வருமாறாகும்.

| விபரம் | சர்வதேச அபிவிருத்திச் சங்கம் | இலங்கை அரசாங்கம் | மாகாண சபை மற்றும் பிரதேச சபை | சமூகம் | கூட்டுத்தொகை |
|---|---|---|---|---|---|
| உடன்பட்ட பங்களிப்பு (ரூபா மில்லியன்) | 3,186 | 715 | 350 | 1,475 | 5,276 |
| 2011 யூன் 30 இல் உள்ளவாறு திரண்ட உள்ளபடியான பங்களிப்பு (ரூபா மில்லியன்) | 4,002 | 655 | 323 | 1,827 | 6,807 |
| நிதிப் பயன்பாடு சதவீதமாக | 126% | 92% | 92% | 124% | 119% |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2009 யூன் மாத இறுதியில் செயற்திட்ட நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்ட காலம் 2011 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. செயற்திட்ட இறுதியில் சர்வதேச அபிவிருத்திச் சங்கம் மற்றும் இலங்கை அரசாங்கம் முறையே ரூபா 4,002 மில்லின் தொகையும் ரூபா 655 மில்லியன் தொகையுமான நிதி முன்னேற்றம் அறிவிக்கப்பட்டிருந்தது. மாகாண சபைகள் மற்றும் பிரதேச சபைகளும் ரூபா 323 மில்லியன் தொகையான முன்னேறத்தைக் காண்பித்தது. எவ்வாறெனினும், நிர்மாணக் கிரயத்தின் பிரகாரம் மாகாண சபைகள் மற்றும் பிரதேச சபைகளுக்காக உடன்பட்ட பங்களிப்பு ரூபா 445 மில்லியன் தொகையான போதிலும் உள்ளபடியான பங்களிப்பு ரூபா 323 மில்லியன் தொகையால் குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.

இவ்வாறே அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்ட அலுவலகங்களுக்கு உரித்தான நிர்மாணிப்புகள் தொடர்பாக பிரதேச சபையால் எவ்வித பங்களிப்புத் தொகையும் பயன்படுத்தப்பட்டிராததுடன் திருகோணமலை மாவட்ட மற்றும் மத்திய மாகாண தோட்ட பிரிவுகளுக்காக சமூக ரீதியான அமைப்புகளுக்கான சமூகப் பங்களிப்பு முறையே 17% ஆகவும் 13% ஆகவுமான குறைவான பெறுமதியைக் கொண்டிருந்தது.

(ஆ) செயற்திட்டத்தின் ஆலோசனைச் சேவைகள் மற்றும் பயிற்சிச் செலவினங்களுக்காக சர்வதேச சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட ஏற்பாட்டில் ஐ.அ டொலர் 1.07 மில்லியன் கூட்டுமொத்த தொகை பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் மதிப்பிடப்பட்ட தொகையில் இது 10% ஆகக் காணப்பட்டது. இவ்வாறே செயற்பாட்டுச் செலவின மதிப்பீடான ஐ.அ.டொலர் 0.03 மில்லியனான நிதிஏற்பாட்டிற்கு மேற்பட்டிருந்தமையால் 2008 ஆம் ஆண்டு முதல் செயற்திட்டம் பூர்த்தியாகும் வரை ரூபா 89,884,135 தொகையான செயற்பாட்டுச் செலவினம் உள்நாட்டு நிதியத்தினால் தீர்க்கப்பப்பட்டிருந்தது.

(இ) கொள்வனவு வழிகாட்டிக் கைநூலின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணத்தினால் ரூபா 2.32 மில்லியன் தொகையான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டமை சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் மீளளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. கணக்காய்வு அவதானிப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

### 3.1 பௌதீக முன்னேற்றம்

#### (அ) நீர் வழங்கல் செயற்திட்டம்

I ,II, III மற்றும் IV தொகுதிகள் தொடர்பான 2011 யூன் 30 இல் உள்ளவாறான பௌதீக முன்னேற்றம் பின்வருமாறாகும்.

| மாகாணம் | ஆங்கீகரிக்கப் பட்ட செயற்திட்ட அலகு | செயற்படுத்தப்பட்ட செயற்திட்ட அலகு | கைவிடப்பட்ட செயற்திட்ட அலகு | பூர்த்திசெய்யப் படாத செயற்திட்ட அலகு |
|---|---|---|---|---|
| மத்திய மாகாணம் | 502 | 469 | 33 | 18 |
| மத்திய – தோட்டம் | 09 | 09 | - | - |
| வடமேல் | 264 | 256 | 08 | - |
| கிழக்கு | | | | |
| திருகோணமலை | 24 | 14 | 10 | 04 |
| அம்பாறை | 41 | 30 | 11 | - |
| | 840 | 778 | 62 | 22 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்டம் தொடர்பான சகல நீர் வழங்கல் செயற்திட்டங்களும் 2011 யூன் 30 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 2011 யூன் 30 ஆந் திகதியில் இருந்த செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் மத்திய மாகாணத்திற்குரிய 18 துணைச் செயற்திட்டங்களும், கிழக்கு மாகாணத்திற்குரிய 04 துணைச் செயற்திட்டங்களும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. பூர்த்திசெய்யப்படாத 22 செயற்திட்டங்களுக்காக ரூபா 95.68 மில்லியன் செயற்திட்டத்தினால் செலவிடப்பட்டிருந்தது.

(ii) மேற்குறித்த பொருட்கள் தொடர்பாக பெற்றுக்கொள்ளப்படக் கூடியதாக இருந்த தகவல்களின் பிரகாரம் 62 துணைச் செயற்திட்டங்கள் நீர் மூலவளங்கள் இன்மை, சமூக பங்களிப்பு இன்மை, நீர் வளங்கள் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் கையேற்கப்பட்டமை போன்ற காரணங்களால் கைவிடப்பட்டிருந்தது. இச் செயற்திட்டங்களுக்காக ரூபா 33.23 தொகையான தொடக்கச் செலவினம் செயற்திட்டத்தால் செலவிடப்பட்டிருந்தது.

மேலும், இச் செயற்திட்டம் கைவிடப்பட்டதையடுத்து வீடுகளைப் பெற்ற 37,115 பேருக்காக நீர் வழங்கல் முறை கைவிடப்பட்டிருந்தது.

## 3.2 சுகாதார நிகழ்ச்சித்திட்டம்

செயற்திட்டத்தின் I ,II, III மற்றும் IV தொகுதிகளின் கீழ் 55,581 கழிவறைகளை மேம்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2011 யூன் 30 இல் உள்ளவாறு 54,490 கழிவறைகள் மாத்திரம் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. சுகாதார நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் பின்வருமாறாகும்.

| மாகாணம்/ மாவட்டம் | சுகாதார தேவைப்பாடு | பூர்த்திசெய்யப்பட்ட கழிவறை எண்ணிக்கை | பூர்த்தி செய்தலின் செயல் முன்னேற்றம் | ஈடுபடுத்திய தொகை |
|---|---|---|---|---|
| | அலகுகள் | அலகுகள் | % | ரூபா மில் |
| மத்திய மாகாணம் | 34,588 | 38,688 | 112 | 54.68 |
| வடமேல் மாகாணம் | 9,722 | 10,783 | 111 | 13.78 |
| திருகோணமலை | 7,237 | 2,236 | 31 | 16.37 |
| அம்பாறை | 3,234 | 2,472 | 76 | 8.78 |
| தோட்டப் பிரிவு | 800 | 311 | 39 | 1.20 |
| | 55,581 | 54,490 | 98 | 94.81 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சுகாதார நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 94.81 மில்லியன் தொகையான சமுதாய அடிப்படை அமைப்புக்களினூடாக செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது முதல் 2011 யூன் 30 ஆம் திகதியில் உள்ளவாறு நலன்பெறுனர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அப் பெறுமதி மீள அறவிடப்படும் சுழற்சி நிதியத்தினூடாக மேற்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறெனினும், சமுதாய அடிப்படை அமைப்பினால் இந் நிதியை முறையாக மீள அறவிடுவதற்கு முடியாமையயாலும் சுகாதார நிகழ்ச்சித்திட்டத்திற்காகப் பெறப்பட்ட பணம் நிர்மாணிப்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டதன் பேரில் இலக்கிடப்பட்ட மலசலகூடங்களின் அளவினை முற்றாக பூர்த்திசெய்ய முடியாதிருந்தது.

(ii) திருகோணமலை மாவட்ட அலுவலகத்திற்கு சுகாதார நடவடிக்கைகளுக்காக ரூபா 16.37 மில்லியன் தொகை செயற்திட்டத்தினால் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2011 யூன் 30 இல் உள்ளவாறு அதன் செயல்முன்னேற்றம் 31% ஆன குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.

(iii) தோட்டப் பிரிவின் சுகாதார நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம் 39% ஆகக் காணப்பட்டதுடன் தோட்ட முகாமைத்துவப் பங்களிப்பு போதியளவு கிடைக்கப்பெறாமை தோட்டத்துறையின் சுகாதார நிகழ்ச்சித்திட்டத்தினை எதிர்பார்க்கப்பட்டவாறு ஆக்கபூர்வமாக அமுல்படுத்த முடியாமைக்கான காரணமாக இருந்தது.

## 3.3 செயற்திட்டச் சொத்துக்கள்

(அ) செயற்திட்டத்திடம் இருந்த ரூபா 113,719,788 பெறுமதியான நிலையான சொத்துக்களில் 82% முக்கியமாக மாகாண சபையின் கீழ் உருவாக்கப்பட்டிருந்த துணைச் செயற்திட்டப் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மிகுதியில் 17% வரிசை அமைச்சிற்கும் 1% அரசாங்க நிறுவகங்கள் சிலவற்றிற்கும் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மேற்குறித்த சொத்துக்கள் ஒப்படைக்கப்பட்டமை தொடர்பாக உரிய நிறுவகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

(ii) மூாகாண சபையின் கீழ் உருவாக்கப்பட்ட துணைச் செயற்திட்டங்களுக்காக இச் சொத்துக்கள் கையேற்கும் நோக்கமாக செயற்திட்டத்தின் எஞ்சிய நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதற்கான போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் நோக்கங்கள் எய்தப்பட்டிராமை கண்டறியப்பட்டது.

(ஆ) சிவில் வேலைகள், ஆலோசனைச் சேவைகள், பயிற்சி நடவடிக்கைகள் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவத்திற்காக ஏற்கப்பட்ட ரூபா 6,693.36 மில்லியன் தொகையான திரண்ட செலவினம் முறையாக இனங்காணப்பட்டு உரிய செயற்திட்ட நலன்பெறுனர்களுக்கு உள்ளீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 செயற்திட்ட நோக்கங்களை எய்துதல்

சமூகத்தின் சுத்தமான குடிநீர்த் தேவைப்பாட்டைப் பூர்த்திசெய்வது, போதிய சுகநல மற்றும் சுகாதார வசதிகளை அடிப்படையாகக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்ட செயற்திட்ட நடவடிக்கைகள் 2011 யூன் 30 ஆம் திகதி கிடைக்கப்பெற்ற முன்னேற்றம் செயற்திட்ட உடன்படிக்கை மற்றும் அறிக்கைகளின் பிரகாரம் பின்வருமாறு காணப்பட்டது.

| விபரம் | செயற்திட்ட உடன்படிக்கையின் படி | சேயற்திட்ட இறுதி அறிக்கையின் படி | ஏய்தப்படும் முன்னேற்றம் சதவீதமாக |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| நலன் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை | 220,000 ( மத்திய வடமேல் மாகாணம்) | 171,341 ( மத்திய வடமேல், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம்) | 78% |
| நலன்பெறுனர்களின் எண்ணிக்கை | 1,230,000 | 719,700 | 58% |
| நீர் வழங்கல் செயற்திட்டம் | | | |
| - Pipe borne gravity Scheme | 41% | 18% | 44% |
| - Pipe borne pumping scheme | 25% | 78% | 312% |
| - Common dug well | 21% | 0.5% | 2% |
| - Deep wells with hand pumping | 8% | 0.3% | 4% |
| - Rain harvesting | 5% | 3.2% | 64% |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நீர் வழங்கல் நலன்பெறுனர்களின் எண்ணிக்கையும் நலன்பெறும் குடும்பங்களின் எண்ணிக்கையும் முறையே 58மூ ஆகவும் 78மூ ஆகவும் குறைந்த மீதியைக் கொண்டிருந்தது.

(ஆ) நீர் வழங்கல் செயற்திட்டம் நீர் வளங்களின் பிரகாரம் மேற்கொள்ளும் முன்னேற்றம் குழாய்நீர் முன்னேற்றம; (Pipe borne Pumping) தவிர்ந்த ஏனைய வளங்கள் மிகவும் குறைவான மீதியைக் கொண்டிருந்தது.

(இ) செயற்திட்ட உடன்படிக்கையின் பந்தி இல 10 (அ) பிரிவின் பிரகாரம் செயற்திட்ட நோக்கங்களான ‘‘இலங்கை கிராமிய சமூகத்தின் நீர் மற்றும் சுகநலச் சேவைப் பயன்பாடு ஆக்கபூர்வமாகவும் தொடர்ந்தும் நடாத்தப்பட்டு வருகின்றதா எனும் மதிப்பீட்டிற்காக செயற்திட்டக் காலத்தின் பின்னர் 5 அளவீட்டு மதிப்பீடுகள் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் செயற்திட்டம் பூர்த்தியானதை அடுத்து அவ் அளவீடுகள் தொடர்பாக ஓர் மதிப்பீடோ அல்லது

கண்காணிப்போ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகையால் செயற்திட்ட நோக்கங்கள் எதிர்பார்க்கப்பட்ட வகையில் எய்தப்பட்டனவா என்பது பிரச்சனைக்குரியதாகியிருந்தது.

## 3.5 செயற்திட்டத்தின் நிலைப்பாடு

செயற்திட்டத்தின் எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்காக 2011 திசெம்பர் 30 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்ட தேசிய சமூக நீர் நிலையத்தினால் 2012 ஆம் ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் குறித்த பிரதேச சபையால் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட 5% பங்களிப்பு முறையான விதத்தில் வழங்கப்பட்டிராமை, நீர்ச் செயற்திட்டங்களில் பிற்கால நீர் வளங்கள் வற்றியமை, நீரின் தரத்திலான வேறுபாடுகள், தொழிநுட்பச் சிக்கல்கள் மற்றும் பாரிய நலன்பெறுனர் எண்ணிக்கைக்காக நீர் வழங்கல், குறித்த செயற்திட்டங்களின் பாதுகாப்பு மற்றும் நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு உரிய சமூகசார் அமைப்புகள் தவறியமை போன்ற காரணங்களால் செயற்திட்ட நடவடிக்கைகளை தொடர்ந்து செயற்படுத்துவது சிக்கலாகக் காணப்பட்டது. இதன் பிரகாரம், இச் செயற்திட்டங்களின் மீளமைப்பிற்காக ரூபா 285.90 மில்லியன் அளவில் செலவிடப்பட்டிருந்தது.

மேலும், செயற்திட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட சமூக சார் அமைப்புகளுக்கு சமூக நீர்ப்பொறுப்பின் கீழ் பதிவுசெய்யப்பட வேண்டுமெனக் கோரப்பட்ட போதிலும் சமூக சார் அமைப்புகள் வீழ்ச்சியடைந்த காரணத்தால் பதிவு குறைவான நிலையில் உள்ளதாக அந்நிறுவகங்களால் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.